**செய்தி வெளியீடு: 591** **நாள் 23.11.2015**

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டில், மழைக்காலத்தையொட்டி பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் வராமல் தடுப்பதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், இனி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் இன்று (23.11.2015) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை செயலாளர் மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழக மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) செல்வி அபூர்வா, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ் கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநர் டாக்டர் எ. சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி மற்றும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துரைத்தார்.

**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தமிழக அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் மற்றும் அனைத்து வகையான தொற்று நோய்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் சில மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பன்றிக் காய்ச்சலை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. உலக அளவில் காணப்படும் பன்றிக் காய்ச்சல், பருவகாலங்களில் காணப்படும் குணப்படுத்தக் கூடிய சாதாரண புளூ காய்ச்சல் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்த போதிலும், தமிழ்நாட்டில் இந்த காய்ச்சலை வராமல் தடுக்கவும், இதனால் இறப்புகள் ஏற்படக்கூடாது என்ற வகையிலும் தமிழக அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ளது.

**டாமிபுளூ மாத்திரைகள் மற்றும் மருத்துவ பாதுகாப்பு கவசங்கள்:** பன்றிக் காய்ச்சலுக்கு ஒசில்டாமிவீர் (டாமிபுளூ) என்ற மருந்தை மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொண்டால் இந்நோயை எளிதாக குணப்படுத்தலாம். தமிழகத்தில் 11 லட்சத்து 12 ஆயிரம் டாமிபுளூ மாத்திரைகள் கையிருப்பில் உள்ளது. இதுமட்டுமின்றி டாமிபுளூ சிரப் 29600 குப்பிகள், 5257 மருத்துவ பாதுகாப்பு கவசங்கள் (Personal Protection Equipment), 39461 N95 பாதுகாப்பு முக கவசங்கள் மற்றும் 81611 மூன்று அடுக்கு முக கவசங்களும் கையிருப்பில் உள்ளன.

**பன்றிக் காய்ச்சலைக் கண்டறிவதற்கு ஆய்வு மையங்கள்:** பன்றிக் காய்ச்சலைக் கண்டறிவதற்கு தமிழகத்தில் சிறப்பு மையங்களாக, கிண்டி கிங் தடுப்புமருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம் உட்பட ஆறு ஆய்வு மையங்களும், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஒரு ஆய்வு மையமும் செயல்படுகின்றன. இது தவிர இந்த காய்ச்சலைக் கண்டறிவதற்கு 13 தனியார் ஆய்வு மையங்களுக்கு பரிசோதனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. **அரசு மருத்துவ நிலையங்களில் இந்த பரிசோதனைகள் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது.**

**விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்:** 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வீடியோ குறும்படங்கள் மூலமும், வாட்ஸ்அப்

மூலமும் விழிப்புணர்வு பணிகள் செய்யப்படுகிறது. மேலும் ஆட்டோக்கள் மூலமாகவும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

**தனியாக சிறப்பு வார்டுகள்:** பன்றிக் காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென, தனியாக சிறப்பு வார்டுகள், சென்னை தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையிலும், அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தடுப்பூசி:** மத்திய சுகாதாரத்துறை அறிவுரையின்படி, மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு இந்நோய் வராமல் தடுக்க, ஏற்கனவே தடுப்பூசிகள் வரவழைக்கப்பட்டு இந்த ஊசி போடப்பட்டுள்ளது.

**தகவல் மையம்:** பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குனரகத்தில், பன்றிக் காய்ச்சல் மற்றும் அனைத்து வகையான காய்ச்சல்கள் குறித்து 24 மணி நேரமும் மருத்துவ ஆலோசனைகள் பெறும் வகையில் தகவல் மையம் (தொலைபேசி எண் **044–24350496, 044–24334811, 94443 40496** மற்றும் **93614 82899)** ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள் பெற ‘104’ சேவையையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் பன்றிக் காய்ச்சலை சாதாரண புளூ காய்ச்சல் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்தபோதிலும், கூடுதல் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ள முதியோர்கள், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், சர்க்கரை நோய் மற்றும் இதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் பன்றிக் காய்ச்சல் அறிகுறி காணப்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவேண்டும். ஆரம்ப நிலையில் இந்த நோயை கண்டறிந்து டாமிபுளூ மாத்திரை உட்கொண்டால் இறப்பு ஏற்படாமல் நோயை குணப்படுத்த முடியும்.

**பன்றிக் காய்ச்சல் வராமல் தடுக்க சுகாதாரமான வழிமுறைகள்:** பன்றிக் காய்ச்சல் வராமல் தடுக்க கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில சுகாதாரமான வழிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றவேண்டும்:

- அண்டை மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்று வந்தவர்களுக்கு காய்ச்சல் ஏற்படும்போது உடனடியாக மருத்துவர்களை அணுகி எந்த வகையான காய்ச்சல் என அறிந்து சிகிச்சை பெறவேண்டும். பன்றிக் காய்ச்சல் என சந்தேகம் ஏற்பட்டால் அவர்களும் மற்றும் அவர்களை சார்ந்தவர்களும் டாமிபுளூ மாத்திரை சாப்பிடவேண்டும். இந்த மாத்திரைகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய அளவு உள்ளது.

- இருமும் பொழுதும், தும்மும் பொழுதும் கைக்குட்டையால் முகத்தை மறைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அடிக்கடி சோப்பு போட்டு கைகளை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும். குறிப்பாக வீட்டிலிருந்து பணியிடம் மற்றும் வெளியிடங்களுக்கு சென்றவுடன் ஒரு முறை கைகளை நன்றாக கழுவ வேண்டும். மீண்டும் வீடு திரும்பியவுடன் ஒரு முறை கைகளை கழுவ வேண்டும்.

- காய்ச்சல், சளி, இருமல், தொண்டைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்ளவேண்டும். சுயமாக மருந்துகள் உட்கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மேலும் மருந்துக் கடைகளில்

மருத்துவரின் சீட்டு இல்லாமல் மருந்துகளை வாங்கி உட்கொள்வதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

**அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர் ஆய்வுகள்:** பன்றிக் காய்ச்சல், டெங்கு போன்ற அனைத்து வகையான காய்ச்சல்களின் நிலைமை குறித்து தலைமைச் செயலாளர் தலைமையில் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய உயர்மட்டக் குழு வாரம் தோறும் ஆய்வு செய்து வருகிறது.

தமிழகத்தில் பன்றிக் காய்ச்சலைக் தடுப்பதற்கு தேவையான தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான உடனடி சிகிச்சை அளிக்கவும் அனைத்து ஏற்பாடுகளும் **மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்யப்பட்டுள்ளன. இது குறித்து பொதுமக்களிடையே அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அறிவுரை வழங்கினார். மேலும் பன்றிக் காய்ச்சல் குறித்து பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

----

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, சென்னை.9